# ஏப்ரல் - 14 – சனி

**“நான்தான், அஞ்சாதீர்கள்” ( யோ 6:20)**

**முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்6 :1 - 7**

அக்காலத்தில் சீடர்களின் எண்ணிக்கை பெருகி வந்தது. அப்போது, கிரேக்க மொழி பேசுவோர் தங்களுடைய கைம்பெண்கள் அன்றாடப் பந்தியில் முறையாகக் கவனிக்கப்படவில்லை என்று எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராக முணுமுணுத்தனர். எனவே பன்னிரு திருத்தூதரும் சீடர்களை ஒருங்கே வரவழைத்து, ”நாங்கள் கடவுளது வார்த்தையைக் கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறை அல்ல. ஆதலால் அன்பர்களே, உங்களிடமிருந்து, நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாய்த் தெரிந்தெடுங்கள். அவர்களை நாம் இந்தப் பணியில் நியமிப்போம். நாங்களோ இறை வேண்டலிலும், இறை வார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்போம்” என்று கூறினர். திரளாய்க் கூடியிருந்த சீடர் அனைவரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டனர். அதன்படியே அவர்கள் நம்பிக்கையும் தூய ஆவியும் நிறைந்த ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கோலா, தீமோன், பர்மனா, யூதம் தழுவிய அந்தியோக்கிய நகரத்து நிர்கொலா என்பவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைத் திருத்தூதர் முன்னால் நிறுத்தினார்கள். திருத்தூதர் தங்கள் கைகளை அவர்கள்மீது வைத்து இறைவனிடம் வேண்டினர். கடவுளது வார்த்தை மேன்மேலும் பரவி வந்தது. சீடர்களின் எண்ணிக்கை எருசலேம் நகரில் மிகுதியாகப் பெருகிக் கொண்டே சென்றது. குருக்களுள் பெருங் கூட்டத்தினரும் இவ்வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நம்பிக்கை கொண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக

**நற்செய்தி : யோவான்6 : 16 – 21**

மாலை வேளையானதும் இயேசுவின் சீடர்கள் கடற்கரைக்கு வந்து, படகேறி மறுகரையிலுள்ள கப்பர் நாகுமுக்குப் புறப்பட்டார்கள், ஏற்கெனவே இருட்டிவிட்டது. இயேசுவும் அவர்களிடம் அதுவரை வந்து சேரவில்லை.அப்போது பெருங்காற்று வீசிற்று கடல் பொங்கி எழுந்தது.அவர்கள் ஐந்து அல்லது ஆறு கிலோ மீட்டர் தொலை படகு ஓட்டியபின் இயேசு கடல்மீது நடந்து படகருகில் வருவதைக் கண்டு அஞ்சினார்கள்.இயேசு அவர்களிடம், ”நான்தான், அஞ்சாதீர்கள்” என்றார்.அவர்கள் அவரைப் படகில் ஏற்றிக் கொள்ள விரும்பினார்கள். ஆனால் படகு உடனே அவர்கள் சேரவேண்டிய இடம்போய்ச் சேர்ந்துவிட்டது.

**தியானம்:** அஞ்சாதே நான் உன்னோடு இருப்பேன் என்று கூறிய யேசு என்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளதா? நம்பிக்கையில் தான் நமது விசுவாச வாழ்வு கட்டப்பட்டுள்ளது. ஆனால் வாழ்வில் வீசும் பலதரப்பட்ட புயலால், கடலில் படகு அலைக்களிக்கப்படுவது போல், எம் வாழ்வும் ஆட்டம் காணுவது உண்மையே! நாமும் சாதாரண மனிதர்கள்தான், இதனால் சில நேரங்களில் புயல்காற்றையும், பெரும் அலைகளையும் சமாளிக்க முடியாமல் தடுமாறுகிறோம். அப்போதுதான் இறைவன் எம்மோடு இருப்பதை நாம் உணர வேண்டும். நம்மோடு கூட வரும் உறவுகள், நண்பர்கள் வழியாக இறைவன் நமக்கு உதவி செய்வார், ஆறுதல் தருவார், கண்ணில் வடியும் கண்ணீரை துடைக்க பல நல்ல உள்ளங்களின் கரங்கள் நீளும். இதனை நாம் உணர்ந்திருக்கின்றோம் அல்லவா? அவ்வாறே நாமும் உதவி இருக்கின்றோமா?. எமது தேவைகளில், வேதனைகளில் பிறர் உதவுவதுபோல், நாமும் மற்றவர்களிற்கு உதவி செய்கின்றோமா? இதனைத்தான் இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். அன்று சீடர்கள் மரண அச்சுறுத்தல்களைக் கூட பொருட்படுத்தாமல், இறை அரசை அறிவித்ததற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். எம்மைச் சுற்றி இருப்பவர்களிற்கு நாம் எவ்வாறு இறை அரசை அறிவிக்கின்றோம்? நாம் வாழும் வாழ்வும், எமது பழக்க வழக்கங்களும், செய்கின்ற செயல்களும் இறை அரசை மற்றவர்களிற்கு அறிவிக்க வேண்டும். இதுவே எமது பாவங்களிற்காக இரத்தம் சிந்திய யேசுவிற்கு நாம் கொடுக்கும் வெகுமதி. உயிர்த்த யேசு நம்மை வழிநடத்துவாராக!